## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.II, SANKARI

## DEPOSITION OF WITNESS

***(Chapter XXIII Code of Criminal Procedure)***

**STC.No.1129/2023** **DATE : 29.05.2024**

வா.சா.**1**

| | | | |
|---|---|---|---|
| Name | : ரமேஷ் | Father's Name | : நல்லையகவுண்டர் |
| District | : சேலம் | Taluk | : சங்ககிரி |
| Village | : ராக்கிபட்டி | Calling | : – |
| Religion | : இந்து | Age | : - |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 29.05.2024.

**முதல் விசாரணை :**

1) நான் தற்போது சேலம் மாவட்டம், ராக்கிப்பட்டி கிராமத்தில் வசித்து வருகிறேன். இவ்வழக்கின் நான் மனுதாரர் ஆவேன். இவ்வழக்கில் எனது முதன்மை சாட்சியத்தை நிரூபண பிரமாண பத்திரிக்கையாகத் தாக்கல் செய்கிறேன். என்னிடம் காட்டப்படும் பிராமண பத்திரிக்கையில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதில் சொல்லி உள்ள சங்கதிகள் அனைத்தும் நான் எனது வழக்கறிஞரிடம் சொல்லி அதை அவர் கணினியில் தட்டச்சு செய்ததை நான் படித்து பார்க்க அதில் நான் சொன்னவாறு இருந்ததால், அதில் நான் கையொப்பம் செய்தேன். எனது பிரமாண பத்திரிக்கையில் குறிப்பிட்டுள்ள 01 முதல் 08 வரையிலான ஆவணங்கள் எனது தரப்பு சான்றாவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன் **(பிரமாண பத்திரிக்கையில் குறிப்பிட்டுள்ள 01 முதல் 08 வரையிலான ஆவணங்கள் வா.சா.ஆ.01 முதல் வா.சா.ஆ.08 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

2) ஆகவே, மனுவில் கூறியுள்ளபடி உத்தரவிடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-**

1) நான் எங்கு வசித்து வருகிறேன் என்றால் ராக்கிப்பட்டி கிராமம், சேர்வாம்பாளையம், கதவு எண்.5/46 என்ற முகவரியில் வசித்து வந்தேன், தற்போது

இளம்பிள்ளையில் வசித்து வருகிறேன். எதிரியை எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் தொழில் ரீதியாக தெரியும். வழக்கறிஞர் அறிவிப்பில் எதிரியை எனக்கு எவ்வாறு தெரியும் என்று சொல்லியுள்ளேன் என்றால் ஞாபகமில்லை. எதிரி என்னிடம் என்ன தேவைக்காக பணம் வாங்கினார் என்றால் குடும்பம் மற்றும் தொழிலுக்காக பணம் வாங்கினார். எந்த தேதியில் எதிரி என்னிடம் கடன் வாங்கினார் என்றால் 16-04-2023 ம் தேதி வாங்கினார். எத்தனை நாட்களில் எவ்வளவு வட்டிக்கு நான் கொடுத்திருந்தேன் என்றால் வட்டிக்கு கடன் கொடுக்கவில்லை, 1 மாதத்தில் பணத்தை திருப்பி தருவதாக சொன்னார்.

2) பணம் வாங்கிய அன்றைய தினமே எதிரி என்னிடம் காசோலையை கொடுத்தாரா என்றால் மறுநாள் தான் கொடுததார். வழக்கறிஞர் அறிவிப்பிலும், புகாரிலும் எதிரி எனக்கு மறுநாள் தான் காசோலையை கொடுத்தார் என்ற விவரத்தை சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. எதிரி என்னிடம் பணத்தை எவ்வாறு பெற்றுக்கொண்டார் என்றால் ரொக்கமாக பெற்றுக்கொண்டார். எதிரி ஒரே நாளில் ரூ.4 லட்சத்தையும் என்னிடம் பெற்றுக்கொண்டார் என்றால் சரிதான். எதிரி 16-04-2023 ம் தேதி என்னிடம் பணம் வாங்கிகொண்டு மறுநாள் காசோலையை கொடுத்தார் என்று சொல்லும்போது காசோலையை எதிரியே நிரப்பி கையொப்பம் செய்து கொடுத்தாரா என்றால் அவரே நிரப்பி கையொப்பம் செய்து கொடுத்தார்.

3) எதிரி எனக்கு கொடுத்த காசோலைகளில் பின் தேதியிட்டு கொடுத்தாரா அல்லது அன்றைய தின தேதியிட்டு கொடுத்தாரா என்றால் 1 மாதம் கழித்து பின் தேதியிட்டு ஒவ்வொரு காசோலைகளில் உள்ள தேதிகளுக்கும் 5 நாட்கள் இடைவெளிவிட்டு 15-05-2023 என்ற ஒரு காசோலையையும், 20-05-2023 என்ற ஒரு காசோலையையும், 25-05-2023 என்ற ஒரு காசோலையையும், 30-05-2023 என்ற ஒரு காசோலையையும் கொடுத்தார். ஒரே மாதத்தில் பணத்தை திருப்பி தருவதாக எதிரி சொன்னபோது என்ன காரணத்திற்காக 5 நாட்கள் இடைவெளிவிட்டு ஒவ்வொரு காசோலைகளில் தேதியை குறிப்பிட்டு கொடுத்துள்ளார் என்பதற்கான காரணத்தை சொல்லியுள்ளாரா என்றால் அவருக்கு அப்போது தான் பணம் வரும் என்று சொல்லி கொடுத்தார்.

4) 2 ம் எதிரிக்கும், 1 ம் எதிரிக்கும் என்ன தொடர்பு என்றால் 1 ம் எதிரியின் உரிமையாளர் தான் 2 ம் எதிரி ஆவார். மேற்படி, 4 காசோலைகளையும் நான் எந்த தேதியில் வசூலுக்காக தாக்கல் செய்தேன் என்றால் 30-05-2023 ம் தேதி தாக்கல் செய்தேன். காசோலைகள் எந்த தேதியில், என்ன காரணம் குறிப்பிட்டு திருப்பபப்பட்டது

என்றால் மறுநாள் Account Closed  என்ற காரணம் குறிப்பிட்டு திருப்பப்பட்டுவிட்டது. Account Closed  என்ற காரணம் குறிப்பிட்டு திருப்பப்பட்டுவிட்டது என்பதனை எனது புகாரிலும், வழக்கறிஞர் அறிவிப்பிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.  நான் எதிரிக்கு பணம் கொடுத்தபோது உடன் யார் யார் இருந்தார்கள் என்றால் யாரும் இல்லை.

5) எதிரி காசோலைகளை என்முன்னிலையில் பூர்த்தி செய்து கொடுத்தாரா என்றால் இல்லை, பூர்த்தி செய்து எடுத்து வந்து என்னிடம் கொடுத்தார்.  எதிரி என்னிடம் நூல் கண்டு வாங்கியதற்காக செக்யூரிட்டிக்காக தான் காசோலைகள் கொடுத்தார் என்றும், எனக்கு செலுத்த வேண்டிய தொகையை சேதாரம் போக மற்ற நூல்கண்டிற்கான தொகையை செலுத்திவிட்டார் என்றும், எதிரியுடைய காசோலைகளை தவறாக பயன்படுத்தி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:-</u>** இல்லை.

Witness (Sd)-Ramesh

Typed to my dictation in open court read over and explained to the witnesses in the presence of the accused and admitted by him to be correct.

Sd/. N.Eniya,
Judicial Magistrate No.II,
Sankari.